Judicial Form No.53
(See Rule 42)

# DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C.)

## IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, NAMAKKAL

## Sessions Case No. 25 of 2025

## Deposition of P.W.5 witness for Prosecution

| | | | |
|---|---|---|---|
| Name | : **திரு. பழனிவேல்** | Caste | : |
| Father's/ Husband's Name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 15th day of July 2025.

(Accused A1 and A2 are present.)

**முதல்நிலை விசாரணை**:

நான் குப்புரிக்காபாளையம் கிராமம், வீரக்குட்டை தெரு, பரமத்தி வேலூர் தாலுக்காவில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். சாட்சி தங்கவேலுவை தெரியும். ஆஜர் எதிரிகளை தெரியும். இவ்வழக்கு சம்பவம் பற்றி எனக்கு தெரியும். எனது தோட்டத்திலிருந்து 4 காடு தள்ளி சாட்சி தங்கவேலுக்கு சுமார் 5 ஏக்கர் நிலம் உள்ளது. அதில் தென்னங்கன்று வைத்து ஊடுபயிராக கரும்பு போட்டிருந்தார். சம்பவ சமயம் 2 வருட தென்னங்கன்றுகள் 220ம் 7 மாத கரும்பு பயிர்களும் தங்கவேலு காட்டில் இருந்தது. சம்பவத்திற்கு முன்பு தங்கவேலுக்கும் எதிரிகளுக்கும் பிரச்சனை இருந்ததா என்று எனக்கு தெரியாது. சம்பவம் 27.07.2024-ம் தேதி காலை 11 மணி சுமாருக்கு நான் வீட்டிலிருந்த போது ரோட்டில் போன 100 நாள் வேலை செய்யும் நபர்கள் தங்கவேல் கரும்பு காட்டில் தீ பிடித்து எரிவதாக சொன்னார்கள். நானும் சதாசிவம் என்பவரும் தங்கவேலு காட்டிற்கு போய் பார்த்தோம். நாங்கள் பார்க்கும் போது தங்கவேல் காட்டில் நெருப்பு எரிந்து கொண்டிருந்தது. நான் வீட்டில் வைத்திருந்த டிராக்டர் மற்றும் ரொட்டேட்ரை எடுத்து சென்று தீ பரவாமல் இருக்க தங்கவேல் கரும்பு காட்டை உழுதோம். அதனால் தங்கவேலின் 1 ஏக்கர் கரும்பு காட்டிலும் மற்ற காட்டிலும் தீ பரவாமல் தடுத்தோம். தங்கவேலுவிடம் விசாரித்த போது தனக்கும் பழனியப்பனுக்கும் வரப்பு தகராறு இருந்தது என்றும், அதனால் எதிரி பழனியப்பன் தனது காட்டில் கரும்பு வெட்டிய பிறகு தோகையை ஒதுக்காமல் தீ வைத்ததால் தீ தனது காட்டிற்கு பரவி விட்டது என்று சொன்னார். எதிரி பழனியப்பன் சொல்லி 2வது எதிரி கந்தசாமி தீயை வைத்ததாக சொன்னார். தங்கவேலு

காட்டில் 3.20 ஏக்கரில் பயிர் செய்திருந்த 7 மாத கரும்பு பயிரும், அதில் வைத்திருந்த 2 வருட தென்னங்கன்றுகள் 220ம், சொட்டு நீர் ஒஸ் பைப், கன்ட்ரோல் வால்வுகள் மற்றும் பிவிசி பைப்கள் ஆகியவை நெருப்பில் கருகி விட்டது. எதிரி பழனியப்பன் தீப்பிடித்து எரிவதை வேடிக்கை பார்த்து கொண்டிருந்தார். 12 மணிக்கு மேல் தீயணைப்புத் துறை வாகனம் வந்து எரிந்து கொண்டிருந்த தீயை அணைத்தது. தங்கவேல் காட்டில் சேதமடைந்த சொத்துக்களின் மதிப்பு ரூ.20,00,000/- இருக்கும். தங்கவேலு எதிரி பழனியப்பனிடம் ஏன் இப்படி தீ வைத்தாய் என்று கேட்டதற்கு "பழனியப்பன் அப்படித்தான் வைப்பேன் திரும்ப கேட்டால் உன்னையும் கொளுத்திவிடுவேன்" என்றும் சொன்னார். ஊர் பஞ்சாயத்தில் பேசி தீர்க்கலாம் என்று முடிவு செய்தோம். ஊர் பஞ்சாயத்திற்கு எதிரிகள் ஒத்து வரவில்லை. அதனால் தங்கவேலு காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். இவ்வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை **:** இல்லை**.**

Judicial Form No.53
(See Rule 42)

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII, Cr.P.C.)

**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, NAMAKKAL**

**Sessions Case No. 25 of 2025**

**Deposition of P.W.6 witness for Prosecution**

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு. பழனியப்பன் | Caste | : |
| Father's/ Husband's Name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 15th day of July 2025.

(Accused A1 and A2 are present.)

**முதல்நிலை விசாரணை**:

நான் குப்புரிக்காபாளையம் கிராமம், வீரக்குட்டை தெரு, பரமத்தி வேலூர் தாலுக்காவில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். தங்கவேலு காட்டிலிருந்து மேல்பக்கம் 2 காடு தள்ளி எனது காடு உள்ளது. ஆஜர் எதிரிகளை தெரியும். எதிரி பழனியப்பன் காட்டிற்கு தென்புறம் தங்கவேலு தோட்டம் உள்ளது. இரண்டு காடுகளும் இணைபொலி காடுகள். தங்கவேலுக்கு 5 ஏக்கர் நிலம் உள்ளது. எதிரி பழனியப்பனுக்கு 4 ஏக்கர் நிலம் உள்ளது. சம்பவம் 27.07.2024 ம் தேதி காலை 11 மணிக்கு நடந்தது. நான் வீட்டிலிருந்த போது ரோட்டு வேலை செய்யும் பெண்கள் தங்கவேலு கரும்பு காட்டிற்குள் தீப்பிடித்து புகை வருகிறது என்று சத்தம் போட்டார்கள். நான் ஓடி போய் பார்த்தேன். பழனியப்பன் காட்டில் கரும்பு வெட்டி ஒரு வாரம் ஆகியிருந்தது. தோகையில் தீ வைத்து இருந்தார்கள். தங்கவேலு காடு தீப்பிடித்து எரிந்து கொண்டிருந்தது. எங்கள் பக்கத்து காட்டை சேர்ந்த சதாசிவம் மற்றும் பழனிவேல் ஆகியோர் டிராக்டர் மற்றும்ரொட்டேட்டர் ஆகியவற்றை வைத்து தீ பரவாமல் தடுப்பதற்காக தங்கவேல் காட்டில் தீப்பிடிக்காத பகுதியில் உழுதார்கள். அதனால் தீ தங்கவேலு காட்டில் ஒரு ஏக்கர் கரும்பில் பரவாமல் தடுக்கப்பட்டது. நான் தங்கவேலுவிடம் விசாரித்தேன். பழனியப்பன் கரும்பு வெட்டிய காட்டில் தோகையை ஒதுக்காமல் எதிரி கந்தசாமியிடம் தீ வைக்க சொன்னதால் தீ தனது காட்டிற்கு பரவிவிட்டதாக சொன்னார். தனக்கும், பழனியப்பனுக்கும் பொலி தகராறு இருந்ததாகவும் அந்த முன்விரோதம் காரணமாக பழனியப்பன் தீ வைத்ததாக சொன்னார். தீயணைப்புத் துறை வண்டி தங்கவேல் போன் செய்ததால் வந்து எரிந்து

கொண்டிடிருந்த தீயை அணைத்தது. அவர்கள் வந்து அணைப்பதற்குள் தங்கவேலு காட்டில் 3 ஏக்கர் 20 செண்டில் இருந்த 220 தென்னங்கன்றுகளும், 7 மாத கரும்பு பயிரும் எரிந்து நாசமாகிவிட்டது. தங்கவேல் காட்டிலிருந்த சொட்டு நீர் ஓஸ், பிவிசி பைப், மற்றும் ஆட்டோமெடிக் கன்ட்ரோல் வால்வுகள் ஆகியவை எரிந்து நாசமாகிவிட்டது. அதன் மொத்த மதிப்பு சுமார் ரூ.20,00,000/- இருக்கும். தங்கவேலு பழனியப்பனிடம் எதற்காக தீ வைக்க சொன்னாய் என்று கேட்டதற்கு "நீ செய்வதை செய் இதற்கு மேல் கேட்டால் உன்னை பெட்ரோல் ஊற்றி எரித்து விடுவேன்" என்று சொன்னார். பஞ்சாயத்தில் பேசி தங்கவேலுக்கு நஷ்ட ஈடு வாங்கி கொடுக்கலாம் என்று கேட்டதற்கு பழனியப்பன் பஞ்சாயத்திற்கு ஒத்து வரவில்லை. அதனால் தங்கவேலு காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை : இல்லை.

Judicial Form No.53
(See Rule 42)

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII, Cr.P.C.)

**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, NAMAKKAL**

**Sessions Case No. 25 of 2025**

**Deposition of P.W.7 witness for Prosecution**

| | | | | |
|---|---|---|---|---|
| Name | : **திரு. வடிவேலு** | Caste | : |
| Father's/ Husband's Name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 15th day of July 2025.

(Accused A1 and A2 are present.)

**முதல்நிலை விசாரணை**:

நான் குப்புரிக்காபாளையம் கிராமம், வீரக்குட்டை தெரு, பரமத்தி வேலூர் தாலுக்காவில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். பால் சொசைட்டியில் Secretary ஆக இருக்கிறேன். சாட்சி தங்கவேலு மற்றும் ஆஜர் எதிரிகளை தெரியும். அவர்கள் எங்கள் ஊரை சேர்ந்தவர்கள். 27.07.2024ம் தேதி காலை 11 மணிக்கு தங்கவேலு காட்டில் தீ பிடித்து எரிந்துவிட்டதாக நான் கேள்விப்பட்டேன். பக்கத்து காட்டை சேர்ந்த எதிரி பழனியப்பன் காட்டில் வேலை செய்யும் எதிரி கந்தசாமி கரும்பு வெட்டிய காட்டில் தோகையில் தீ வைத்ததால் அது தங்கவேலு காட்டில் பரவிவிட்டதாக கேள்விப்பட்டேன். அன்று மாலை 5 மணி அளவில் தங்கவேலு காட்டிற்கு போய் பார்த்தேன். நான் பார்க்கும் போது 7 மாத கரும்பு பயிர்களும், 220 தென்னங்கன்றுகளும் எரிந்து இருந்தது. சொட்டு நீர் டியுப், கேட்வால்வு, பிவிசி பைப் லைன் ஆகியவையும் எரிந்து இருந்தது. பிறகு, 31.07.2024ம் தேதி காலை 10 மணி வாக்கில் நானும் பரமேஷ்வரன் என்பவரும் தங்கவேல் காட்டை பார்ப்பதற்காக போனோம். அங்கு காவல் ஆய்வாளர் இருந்தார். அவர் தங்கவேலு காட்டை பார்வையிட்டு மாதிரி வரைபடம் வரைந்தார். நானும், பரமேஷ்வரனும் ஆய்வாளருடன் இருந்தோம். ஆய்வாளர் விவரங்களை எழுதினார். நானும், பரமேஷ்வரனும் என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் சாட்சியாக கையெழுத்து போட்டோம்.

அதில் உள்ள 2வது கையெழுத்து என்னுடையது தான். அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ.2 ஆகும். பின்பு இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை **:** இல்லை.